முருகப்பெருமான் துணை

**மகான் குருதட்சணாமூர்த்தி அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

26.10.2022, புதன்கிழமை

1. யோகானந்த ஞான குருவே
உண்மை வழி காட்டும் சற்குருவே
செகமெங்கும் சன்மார்க்கமதை
சித்திதரும் வண்ணம் அருளுகின்ற
2. அருளுகின்ற ஆறுமுக அரங்கனே
அகிலமதில் உன் பெருமை கூறி
அருளுவேன் சுபகிருது துலை திங்கள்
அய்யமற நவதிகதி கணக்கன் வாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 09 ம் நாள் 26.10.2022, புதன்கிழமை)
3. வாரமதில் குருதட்சணாமூர்த்தி யானும்
வையகம் ஞானபலம் பெற உரைப்பேன்
சோரமிலா ஞானம் அருளவே
சுப்பிரமண்யர் அவதாரமாக வந்த
4. வந்தநல் அரங்க மகானை
வணங்கித் திருவடி பணிந்து
சிந்தைதனில் குருவாக ஏற்று
செபதபமாக ஞானிகள் பூசை
5. பூசைதனை உலகோர் செய்து
புண்ணிய வழிகளை கடைபிடிக்க
பூசைபலனாக குருவருள் வந்து
புகழும் நல்ல வாழ்வும் தந்தருளும்
6. அருளவே அரங்கன் துணை
ஆபத்தை வெல்லும் பெருந்துணை
வரமெனத் தொடர்ந்து வர
வாராந்திர குருவாரம் ஆசிபெற
7. ஆசிபெற அரங்கன் கரம்பட
அருளுவேன் குருதட்சணாமூர்த்தியும்
ஆசிபட அனைத்து வகை அனுகூலம்
அடைந்திட அருள் செய்வேன்
8. செய்யவே சைவ நெறிமுறையோடு
சிறப்பான அன்னதானமதை
அய்யமற முருகன் தருமமாக
அனைவரும் ஏற்று வந்து
9. வந்துமே பொருளுதவி செய்து
வரமாகத் தருமம் வளரவே
எந்தவித கலக்கமும் இன்றி
இணைந்து தொண்டு செய்ய

10. செய்யவே எண்ணம் தெளிவு
சிறப்பறிவாக வெற்றிகள் தானும்
அய்யமின்றி அனைத்திலும் கண்டு
அகிலத்தார் மேல்நிலை காண்பர்

11. காண்கவே அரங்கனே சிறந்தநல்
கலிதனில் நம்பி வருபவர்க்கு
நன்மைதரும் காரண காரிய சற்குரு
ஞானிஆகவே மாற்றும் ஞானகுரு
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—